செ.வெ.எண்.50 நாள். 17.10.2017

காய்ச்சல் பாதிப்புக்கள் கண்டறியப்பட்டால் உடனடியாக பொது மக்கள் தகவல் அளிக்கவும்.

மாவட்ட ஆட்சித் தலைவர் வேண்டுகோள்.

பருவநிலை மாற்றம் மற்றும் மழை பொழிவு காரணமாக காய்ச்சல் பாதிப்புக்கள் பரவலாக கண்டறியப்படுகிறது. இத்தகைய காய்ச்சல் பாதிப்புக்களை உடனடியாக கண்டறிந்து சிகிச்சை அளிக்க மருத்துவம் மற்றும் பொது சுகாதார துறையுடன் இணைந்து மாவட்ட நிர்வாகம் முழு வீச்சில் செயல்பட்டு வருகிறது. எனவே பொது மக்கள் தங்கள் பகுதிகளில் எவருக்கேனும் காய்ச்சல் பாதிப்பு அறியப்பட்டால் உடனடியாக மாவட்ட நிர்வாகத்திற்கு தகவல் அளிக்க மாவட்ட ஆட்சித் தலைவர் திரு பிரசாந்த் மு.வடநேரே இ.ஆ.ப அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது.

பொதுவாக அக்டோபர் தொடங்கி டிசம்பர் வரையிலான காலகெடுவுக்குள் பருவநிலை மாற்றம் மற்றும் மழை பொழிவு காரணமாக பரவலாக காய்ச்சல் பாதிப்புக்கள் ஏற்பட வாய்ப்பாக அமைந்துள்ளது. தற்போதைய சூழ்நிலையில் ஆங்காங்கே டெங்கு காய்ச்சல் பாதிப்புக்கள் ஏற்படுவதாகவும் கண்டறியப்படுகிறது. எனவே இத்தகைய நோய் பரவலை தடுக்க பொது சுகாதாரம் மற்றும் மருத்துவ துறை போர்க்கால அடிப்படையில் செயல்பட்டு வருகிறது என்ற போதிலும் மாவட்ட நிர்வாகமும் இதனுடன் இணைந்து முழு வீச்சில் செயல்படுகிறது. காய்ச்சல் மற்றும் டெங்கு காய்ச்சல் கட்டுப்பாட்டு பணிகள் அரசின் உயர்நிலை அலுவலர்களால் தினசரி ஆய்வு மேற்கொள்ளப்பட்டு துரித நடவடிக்கையுடன் கூறிய அறிவுரை வழங்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலுக்கிணங்க காய்ச்சல் மற்றும் டெங்கு காய்ச்சல் நோய் பரவலை தடுக்கவும், உரிய தகவல் பெற்று உடனடியாக நோய் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள ஏதுவாக மாவட்ட அளவில் கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஒரு பிரத்யேக கட்டுப்பாட்டு அறை இன்று 17.10.2017 முதல் செயல்பட தொடங்கி வைக்கப்பட்டுள்ளது. இந்த கட்டுப்பாட்டு அறையில் தகவல் பெற 24 மணிநேரமும் பணியாளர்கள் பணியில் இருப்பர். இவர்கள் காய்ச்சல் குறித்து தகவல் வரப்பெற்றதும் உடனடியாக நோய் தடுப்பு பணிகளுக்கு ஏதுவாக செயல்பட இது வழி வகுக்கும். எனவே பொது மக்கள் தங்கள் குடும்பத்திலோ, தங்கள் வசிப்பிடத்திலோ, தங்கள் பகுதியிலோ, தங்கள் கிராமத்திலோ வேறு எங்கும் யாருக்காவது காய்ச்சல் பாதிப்பு கண்டறியப்பட்டால் உடனடியாக இந்த கட்டுப்பாட்டு அறைக்கோ அல்லது கீழே குறிப்பிடப்பட்ட தொலைபேசி எண்ணுக்கோ தகவல் அளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மாவட்ட ஆட்சியர் அலுவலக கட்டுப்பாட்டு அறை தொலைபேசி எண். 1077

நோய் பாதிப்பு குறித்த தகவல் அளிக்க தொலைபேசி எண். 04142–220700

17/10

மாவட்ட ஆட்சித் தலைவர்
கடலூர்